முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026

General Certificate of Education (Adv. Level) Third Term Exam – 2026

இந்துசமயம் Hindusim	Grade 12	T	42	I,II	மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. **1** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (ஓ)** இடுவதன் மூலம் காட்டுக.

❖ 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று எதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது பொருந்தாததைத் தெரிவு செய்க.

01) 1. சுருதி 2. அபௌருஷேயம் 3. வைகாசனம்
4. ஆம்நயம் 5. சுயம்பு

02) 1. அருணகிரிநாதர் 2. திருநாவுக்கரசர் 3. சிறுத்தொண்டர்
4. சுந்தரர் 5. இளையான்குடிமாறநாயனார்

03) 1. சைவவினாவிடை 2. பாலபாடம் 3. சைவதூசணபரிகாரம்
4. பெரியபுராணவசனம் 5. தேவாரம் வேதசாரம்

04) 1. சைவம் 2. சாக்தம் 3. வைணவம்
4. சமணம் 5. அகௌமாரம்

05) 1. சரியாபாதம் 2. சுப்ரபாதம் 3. யோகாபாதம்
4. ஞானாபாதம் 5. கிரியாபாதம்

❖ 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடி சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடிச்சொல்லைத் தெரிவு செய்க.

06) 1. படைத்தல - எழுத்தாணி பிடித்தல்
2. காத்தல் - மோதகம் இருக்கும் கரம்
3. அழித்தல் - அங்குசம் ஏந்திய கரம்
4. அருளல் - அமுதகலசம்
5. மறைத்தல் - பானைவயிறு

07) 1. சிம்மவிஷ்ணு - சங்கீர்ணஜாதி
2. மகேந்திரவர்மன் - குணபரன்
3. மாமல்லன் - 1ம் நரசிம்மபல்லவன்
4. பரமேசுரவர்மன் - வித்யாவிநிதன்
5. இராஜசிம்மன் - 2ம் நரசிம்மவர்மன்

08) 1. சேக்கிழார் - திருத்தொண்டர் புராணம்
2. திருமூலர் - திருமந்திரம்
3. பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு
4. ஆண்டாள் - திருத்தொண்டர் தொகை
5. நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி

Past Papers Wiki

09) 1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் - யாழ்ப்பாணத்து சமயநிலை
2. சுவாமி விபுலானந்தர் - கணேசதோத்திர பஞ்சகம்
3. போசராச பண்டிதர் - செகராசசேகர மாலை
4. சபாபதி சோதிடர் - சந்தானதீபிகை
5. அராலி இராமலிங்க முனிவர் - சந்தானதீபிகை

10) 1. சத்யம் வத - உண்மை பேசுக
2. தர்மம் சர - தர்மத்தின் வழியில் நட
3. ரிஷி தேவோபவ - முனிவரைத் தெய்வமாக போற்றுக
4. ஆச்சார்ய தேவோபவ - ஆசிரியரைத் தெய்வமாக போற்றுக
5. அதிதி தேவோபவ - அனாதைகளை தெய்வமாக போற்றுக

❖ 11 – 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

11) ஆலயக்கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்திக்காக ஆற்றப்படும் கிரியை
1. பிராயச்சித்தம் 2. காமிகம் 3. சிவலிங்கபூசை
4. கர்ஷணம் 5. பிரமோற்சவம்

12) "சிவானந்த நடனம்" எனும் நூலினை இயற்றியவர்
1. சுவாமி விபுலானந்தர் 2. ஞானப்பிரகாசர் 3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
4. காசிவாசி செந்திநாதையர் 5. ஆனந்தகுமாரசுவாமி

13) அடியார் பெருமை பற்றி புகழ்ந்து பாடிய முதல் நாயனார்
1. சேக்கிழார் 2. மாணிக்கவாசகர் 3. அமர்நீதி நாயனார்
4. சுந்தரமூர்த்திநாயனார் 5. திருநாவுக்கரசு நாயனார்

14) பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறும் நூல்
1. புறநானூறு 2. திருமுருகாற்றுப்படை 3. கலித்தொகை
4. திருக்குறள் 5. திரிகடுகம்

15) "தோற்றம் துடியதனில் தோயுந்திதியமைப்பில்..." எனும் பாடலில் வெளிப்படுத்தும் சிவமூர்த்தம்
1) தட்சணாமூர்த்தி 2) அர்த்தநாரீஸ்வர மூர்த்தி 3) சோமாஸ்கந்தர்
4) நடராஜர் 5) சதாசிவமூர்த்தி

❖ மேல்வரும் பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 16 –20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க.

A	B	C	D	E
கறைமிடற்றண்ணல்	உரையாடல்	திருமந்திரம்	துட்டகைமுனு	முத்தியானந்தர்
F	G	H	I	J
உப்புலவன்	நீதிபதி	முக்கட்செல்வன்	தமிழாகமம்	உப்புநீர்

16) சங்ககாலத்தோடு தொடர்புடைய தொகுதி.
1. AF 2. AH 3. AC 4. EH 5. DI

17) பத்தாம் திருமுறையுடன் தொடர்புடைய தொகுதி.
1. AB 2. BF 3. CI 4. EG 5. BJ

18) ஞானகாண்டத்துடன் தொடர்புடைய தொகுதி
1. DAJ 2. DH 3. AF 4. BJ 5. DG

19) அனுராதபுர காலத்துடன் தொடர்புடைய தொகுதி
1. AE 2. AD 3. DF 4. BI 5. GJ

20) கடையிற் சுவாமிகளுடன் தொடர்புடைய தொகுதி
1. AC 2. EH 3. EF 4. EG 5. DG

Past Papers Wiki

❖ 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளனன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

21) வடமொழி இராமாயணம்
1. இராமனை கதாநாயனாகக் கொண்ட காவியம்
2. வால்மீகியால் எழுதப்பட்டது.
3. இதிகாசங்களில் ஒன்றாக அமைவது.
4. காண்டங்கள் என்னும் பகுதிகளை உடையது.
5. இந்துசமயக் கதைகளின் தொகுப்பாக அமைவது.

22) சலாசலவடிவங்கள்
1. சிற்பங்களை இருத்தும் நிலை பற்றி ஆகமங்கள் கூறும் வடிவங்களாகும்.
2. இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய வடிவங்கள் ஆகும்.
3. ஓரிடத்தில் நிலையாக நிறுவப்படுகின்ற வடிவங்களாகும்.
4. நகர்தக்கூடியனவாக இருப்பினும் நகர்த்தக் கூடாதெனும் நோக்கில் நிறுவப்படுகின்றனவாகும்.
5. அமைதியான நிலையில் அடியவர்களுகு வேண்டுவனவற்றை வழங்கும் வடிவங்களாகும்.

23) திருஞானசம்பந்தர்.
1. இறைவனை துதித்து தேவாரங்கள் பாடினார்.
2. தலயாத்திரைகளை மேற் கொண்டார்.
3. கூன்பாண்டியனின் வெப்புநோயை நீக்கினார்.
4. மக்களை ஒன்று திரட்டி பக்தி இயக்கத்தை ஆரம்பித்தார்.
5. கிரியை நெறி நின்று இறைவனை வழிபட்டார்.

24) சுவாமி விபுலானந்தரின் சமயப்பணி
1. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்தார்.
2. மானிப்பாய் இநதுக்கல்லூரியின் அதிபராக விளங்கினார்.
3. மும்மொழிகளிலும் வல்லவராக விளங்கினார்.
4. மகாலட்சுமி தோத்திரம், கணேசதோத்திர பஞ்சகம் ஆகியவற்றை இயற்றியமை.
5. மதங்கசூளாமணி, யாழ்நூல் ஆகிய நூல்களை இயற்றியமை.

25) கொக்கட்டிச்சோலை தான்றீஸ்வர ஆலய முக்கியத்துவம்
1. கொக்கட்டிச்சோலையில் அமைந்துள்ளது.
2. இறைவன் தான்தோன்றீஸ்வரர் ஆவார்.
3. மகோற்சவம் முழுவதையும் தேரோட்டம் என அழைப்பர்.
4. மட்டக்களப்பு தமிழகமம் இதன் வரலாற்றைக் கூறும்.
5. குளக்கோட்டன் இவ்வாலயத்திற்கு திருப்பணி புரிந்தான்.

(25 x 4 = 100 புள்ளிகள்)

பகுதி II

❖ பகுதி "**அ**" இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி "**ஆ**" இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

பகுதி "அ"

01) இந்து சமயத்தின் முதல் நூல்கள் என்ற வகையில் வேதங்கள் சிறப்புப் பெறுகின்றன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

அ. வேதம் என்பதன் பொருள் (2 புள்ளிகள்)
ஆ. வேதங்களின் சிறப்புகள் (4 புள்ளிகள்)
இ. கடவுளர்களும் வழிபாடுகளும் (8 புள்ளிகள்)
ஈ. இருக்கு வேதம் (8 புள்ளிகள்)

02) இந்துசமய மரபில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க

அ. ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம் (4 புள்ளிகள்)
ஆ. சிவாகமங்களின் சிறப்பு (4 புள்ளிகள்)
இ. ஆலய நிருமானமும் திருவுருவ அமைப்பும் (6 புள்ளிகள்)
ஈ. சிவாகமம் கூறும் சைவசித்தாந்த சிந்தனைகள் (6 புள்ளிகள்)

03) பல்லவர் காலத்தில் நாயன்மார்கள், ஆழ்வார்கள், மன்னர்களின் பணிகளால் "பக்திநெறிக்காலம்" என அழைக்கப்படலாயிற்று.

அ. சைவநாயன்மார்களின் நால்வரின் பெயர்களைத் தருக (2 புள்ளிகள்)
ஆ. முதல் ஆழ்வார்களின் பெயர்களைத் தருக (2 புள்ளிகள்)
இ. நாயன்மார்களின் பணிகளைத் தருக (8 புள்ளிகள்)
இ. பல்லவ மன்னர்களின் பணிகளைத் தருக (8 புள்ளிகள்)

பகுதி "ஆ"

04) நாட்டார் கலையினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக

அ. பிரதேச ரீதியாக கூத்துக்களை வகைப்படுத்துக (4 புள்ளிகள்)
ஆ. வடமோடிக் கூத்திற்கான ஒப்பனைகள் (4 புள்ளிகள்)
இ. தென்மோடிக் கூத்திற்கான ஒப்பனைகள் (4 புள்ளிகள்)
ஈ. கூத்தின் சமூக சமய முக்கியத்துவம் (8 புள்ளிகள்)

05) ஆறுமுகநாவலர் ஆற்றிய சமயப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி என்பன தொடர்பாக விபரிக்குக (20 புள்ளிகள்)

06) ஊடகம் என்பது மக்களுக்கு தகவல்களை வழங்கிக் கொள்வதாகும்.

அ. மரபுவழிச் சாதனங்கள் நான்கினை குறிப்பிடுக (4 புள்ளிகள்)
ஆ. வெளிப்புறச் சாதனங்கள் நான்கினை குறிப்பிடுக (4 புள்ளிகள்)
இ. சொல்வழித் தொடர்பு முறைகளை தருக (4 புள்ளிகள்)
ஈ. இந்துசமயத்தில் ஊடகம் பெற்றுள்ள முக்கியத்துவத்தினை ஆராய்க (8 புள்ளிகள்)

07) இலங்கையில் பொலநறுவைக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை பரிசீலனை செய்க

அ. பொலநறுவைக்காலத்தில் இந்துசமய வளர்ச்சிக்கு பங்காற்றிய மன்னர்களை குறிப்பிடுக (2புள்ளிகள்)
ஆ. பொலநறுவைக் காலக் கோயில்களை வகைப்படுத்திக் கூறுக (4புள்ளிகள்)
இ. பொலநறுவைக் காலத்து வெண்கலப்படிவங்கள் பற்றிக் குறிப்பிடுக (6புள்ளிகள்)
ஈ. பொலநறுவைக் காலத்தில் சைவ சமயம் வளர்ச்சி பெற்றவாற்றை விளக்குக (8புள்ளிகள்)

08) இலங்கையின் இந்துசமய வரலாற்றில் மேல்வரும் சிவாலயங்கள் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக

அ. திருக்கேதீச்சரம் (10புள்ளிகள்)
ஆ. முன்னேச்சரம் (10புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library